# வள்ளலாரின் ஆன்மீகப் பரிணாமம்

***முனைவர் ச. பத்மாதேவி***
*தமிழ்த்துறைத் தலைவர்*
*நூருல் இஸ்லாம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி*
*குமாரகோவில்*

சிதம்பரத்திற்கு வடமேற்கிலுள்ள கருங்குழிக் கிராமத்தில் மருதூர் என்னும் சிற்றூரில் இராமையாப்பிள்ளைக்கும், சின்னம்மையாருக்கும் பிறந்த இராமலிங்கம் பிள்ளையே ஆன்மீகப் பரிணாம மாற்றத்தில் வந்த வள்ளலார்.

**சின்னம்மையாரும் சம்புபட்ச சத்தியவாக்கும்**

இராமையாபிள்ளை, சின்னமையார் ஆகியோரின் இல்வாழ்க்கை மிகவும் சிறப்புடன் அமைந்திருந்தது. கருத்தொருமித்து ஆதரவு பட்ட முறையில் அவர்கள் வாழ்ந்து வந்தனர்.

**“அறவோர்க்களித்தல் அந்தணரோம்பல்**
**துறவோர்க் கெதிர்தல் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடல்”** - (சிலப்பதிகாரம் கொலைக்களக்காதை ப.71,73)

ஒருநாள் இராமையாபிள்ளை தில்லைநாதனின் தரிசனத்திற்காக சிதம்பரத்திற்குச் சென்றிருந்தார். சிவயோகியார் ஒருவர் அவர்களது இல்லத்திற்கு வந்தார். அவரைக் கண்டதும் சின்னம்மையார் பக்தியுடன் எதிர்கொண்டு ஆரத்தி எடுத்து வரவேற்று உணவளித்து உபசரித்தார்.

**“அன்புடைய அம்மா! உலகெலாம் போற்றும்**
**அழிவற்ற சுத்தசன்மார்க்கத்தை வழங்கும் ஓர்**
**உத்தமப் புதல்வனை நீ பெறுவாயாக”**

(சுவாமி சரவணானந்தா, வள்ளலார் வாழ்க்கையும் தத்துவமும் ப.11)

என்ற சம்புபட்ச அருள்வாக்கினை அளித்ததன்படி 1823-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஐந்தாம் நாள் ஞாயிற்றுக்கிழமை அம்மையார் ஓர் ஆண்மகனைப் பெற்றெடுத்தார். அந்த அருட்குழந்தையே வள்ளலார். இதுவே முதல் ஆன்மீகப் படிநிலையாகும்.

**அம்பலக்காட்சி**

ஒருநாள் சின்னம்மையார் இராமலிங்கத்தை கையில் ஏந்திய வண்ணம் தம் கணவருடன் தில்லை சென்றார். கோவிலில் அப்பைய தீட்சிதர் என்ற அந்தணர் சுவாமிக்குக் கற்பூர ஆரத்தி காட்டினார். குழந்தையோ சுவாமியை இமைகொட்டாமல் பார்த்தது மட்டுமின்றிக் கற்பூர ஆரத்தியைக் கண்டதும் கலகலவெனச் சிரித்து மகிழ்ந்தது. அக்காட்சியைக் கண்ட தீட்சிதர் வியப்படைந்து அக்குழந்தையின் பெற்றோரைப் பார்த்து

**“இக்குழந்தை சாதாரணக் குழந்தையன்று**
**அம்பலவாணரின் அருட்குழந்தையாகும்”**

(ம.பொ.சிவஞானம் வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு ப.55)

கல்லாமலேயே இராமலிங்கசுவாமி நல்லறிவு பெற்றுள்ளது அவருடைய தெய்வீகத் தன்மையைப் புலப்படுத்துகிறது.

**ஓதாது உணர்ந்திட ஒளியளித்தெனக்கே**
**ஆதாரமாகிய அருட்பெரும் சோதி**

(ம.பொ.சிவஞானம் வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு ப.58)

**முதல் திருமுறையும் முருகன் பாடல்களும்**

வள்ளலார் முதல் ஆன்மீகப் பயணத்தை திருவருட்பாவின் முதல் திருமுறையில் முதலாவதாக அமைந்துள்ள சென்னைக் கந்தக்கோட்ட முருகப்பெருமான் மீது பாடிய பதிகமான தெய்வீக மணிமாலையாகும்.

**"திரு ஓங்கு புண்ணியச் செயல்ஓங்கி அன்பருள்**
**திறலோங்கு செல்வம் ஓங்கச்**
**செறிவோங்க அறிவோங்கி – நிறைவான இன்பம்**
**திகழ்ந்தோங்க அருள் கொடுத்து**
**மரு ஓங்கு செங்கமல மலர் ஓங்கு வணம் ஓங்க**
**வளர் கருணை மயம் ஓங்கி ஓர்**
**வரம் ஓங்கு தென் அமுத வயம் ஓங்கி ஆனந்த**
**வடிவாகி ஓங்கி ஞான….."** (ஊரன் அடிகள் திருஅருட்பாதிரட்டு ப.3)

கந்தகோட்டம், திருத்தணிகை, திருஒற்றியூர், புள்ளிருக்குவேயூர், சிங்கபுரி போன்ற தலங்களில் உள்ள முருகனை முதல் திருமுறையில் வள்ளலார் பாடியுள்ளார்.

**இரண்டு, மூன்று, நான்கு, ஐந்தாம் திருமுறையும் சிவபாடல்களும்**

வள்ளலாரின் திருவருட்பாவின் இரண்டாம் திருமுறை கருணை விண்ணப்பம் என்பது தொடங்கி இரேணுகை பஞ்சகம் முடிய நூற்றி மூன்று பதிகங்களை உடையது. மொத்தம் ஆயிரத்தி முந்நூற்றி எண்பத்தி எட்டு செய்யுள்கள் உள்ளன. ஒரு பதிகத்தில் திருவெற்றிரூடன் தில்லையும் சேர்த்துப் பாடியுள்ளார். மேலும் இப்பகுதியில் குறிப்பிடத்தக்கவை வடிவுடை மாணிக்கமாலை, இன்பமாலை, அருண்மொழி மாலை, இங்கித மாலை என்பவனவாகும்.

திருவருள் வழக்க விளக்கம்'' என்னும் இருபத்தி நான்காம் பதிகத்தில் திருவொற்றிளீ இறைவன் திருவருளை அடியார்க்கு வழங்கியதை,

**"தோடுடையார் புலித்தோலுடை**
**யார் கடல் தூங்கும்…….. என்ற பாடலில் உணர்த்துகிறார்''.**

**"திருஅருட்பா திருமுறைகளில் "தேவிகள் பற்றிய பாடல்கள்"**

இரண்டாம் திருமுறையில் வடிவுடை மாணிக்கமாலை பற்றி நூற்றி இரண்டு பாடல்கள் உள்ளன.

மூன்றாம் திருமுறையில், திருமகள் வாழ்த்து – 1, கலைமகள் வாழ்த்து – 3, பெரிய நாயகியார் தோத்திரம் - 5, இரேணுகை தோத்திரம் - 10, பாடல்கள் உள்ளன.

நான்காம் திருமுறையில் அம்மை திருப்பதிகள் - 10, சிவகாமவல்லி துதி – 5, 7 தலைப்புகளில் 129 பாடல்கள் உள்ளன.

**"கலைமகளோ நின் பணியை அன்போடும் கடைப்பிடித்தாள்**
**அலைமகளோ அன் பொடித்தாள் எற் கறைதிகண்டாய்**
**தலைமகளே அருட்டாயே செவ்வாய்க்கருஞ் தாழ்குழற்பொன்**
**மலைமகளே ஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே" (பா.1403)**

திருவருட்பாவில் மூன்றாம் திருமுறையில் சித்திவிநாயகர்பதிகம் 12 பாடல்கள், வல்லபை கணேசர் பிரசாதமாலை 11 பாடல்கள், கணேசத்திரு அருள்மாலை – 10 பாடல்கள், கணேசத்தனித்திருமாலை 4 பாடல்கள்

என்ற நான்கு தலைப்புகளில் 39 பாடல்கள் விநாயகரைப் போற்றி வள்ளலாரால் பாடப்பட்டது.

**"கலைநிறை கணபதி சரணஞ் சரணம்**
**கஜமுக கணபதி சரணஞ் சரணம்**
**தலைவ நின் இணையடி சரணஞ் சரணம்**
**சரவண பவகுக சரணஞ்சரணம்**
**சிலைமலையுடையவ சரணஞ் சரணம்**
**சிவசிவ சிவசிவ சரணஞ் சரணம்**
**உலைவறும் ஒருபரை சரணஞ் சரணம்**
**உமைசிவை அம்பிகை சரணஞ் சரணம்''** - (ஊரன் அடிகள் - திருஅருட்பா, பா.2563)

**திருஅருட்பாவில் இரண்டாம் திருமுறையில், பாடல்கள்**

1. இராம நாம சங்கீர்த்தனம்
2. இராம நாமப்பதிகம்
3. வீரராகவர் போற்றிப் பஞ்சகம் 3 தலைப்புகளில் 7 பாடல்கள் இராமனைப் பற்றி பாடப்பட்டுள்ளது.

> **“காராய வண்ண மணிவண்ண கண்ணகன வங்கு சக்ர தரநீன்**
> **சீராய தூய மலர்வாய நேய ஸ்ரீராம ராமவெனவே**
> **தாராய வாழ்வு தருநெஞ்சு சூழ்க தாமோதராய நமவோம்**
> **நாராயணாய நமவாமனாய நமகேசவாய நமவே”** (ஊரன் அடிகள் - திருஅருட்பா, பா.1938)

இரண்டாம் திருமுறையில் தொண்ணூற்றி எட்டு தலைப்புகளில் மொத்தம் ஆயிரத்து இருநூற்று அறுபத்தைந்து பாடல்கள் பாடியுள்ளார் வள்ளலார். மீதமுள்ள ஐந்து தலைப்புகள் தேவி ராமனைப் பற்றியது.

மூன்றாம் திருமுறையில் பத்து தலைப்புகளில் மொத்தம் நானூற்றுதொண்ணுற்றிஒன்று பாடல்கள். மூன்றாம் திருமுறையில் மொத்தம் இருபத்திஏழு தலைப்புகள் உள்ளன. அதில் பதினேழு தலைப்புகள் தனிப் பாசுரங்களாகவும், விநாயகர் மங்களம் பற்றிய பாடல்களாகவும் உள்ளன.

நான்காம் திருமுறையில் முப்பத்தி ஒன்பது தலைப்புகளில் நானூற்று நாற்பத்தி மூன்று பாடல்கள் சிவனைப் பற்றியதும், சிவனைச் சார்ந்த பாடல்கள் ஆகும். மீதமுள்ள இரண்டு தலைப்புகளில் உள்ள பதினைந்து பாடல்கள் தேவிகளைப் பற்றியதாகும்.

ஐந்தாம் திருமுறையில் பன்னிரெண்டு தலைப்புகள் மொத்தம் உள்ளன. அதில் எட்டு தலைப்புகளில் சிவனைப் பற்றிய பாடல்கள் மீதமுள்ள நான்கு தலைப்புகளில் உள்ளவை சிவ அடியவர்களைப் பற்றியது. மொத்தம் இருநூற்று முப்பத்து எட்டு பாடல்கள் அதில் சிவனைப் பற்றிய பாடல்கள் நூற்றி தொண்ணுற்றி ஏழு பாடல்கள் உள்ளன.

நூற்றி ஐம்பத்தி ஐந்து தலைப்புகளில் சிவனைப் பற்றி இரண்டாயிரத்து முன்னூற்றி தொண்ணுற்று ஆறு பாடல்கள் முறையே இரண்டு, மூன்று, நான்கு, ஐந்தாம் திருமுறைகளில் அமைந்துள்ளன.

திருஅருட்பா ஆறாம் திருமுறையில் சிவனைப் பற்றிய பாடல்களும் தத்துவப் பாடல்களும் காண முடிகிறது.

**அருட்பாவில் இயல்பான உண்மை அறிவு**

> **“அறிவற்றம் காக்கும் கருவி, செறுவார்க்கும்**
> **உள்ளழிக்க லாகா அரண்” (கு.421)**

அறிவு அழிவுவராமல் காக்கும் பயனள்ள கருவியாகும். அவ்வறிவு பகைவர் உட்புகுந்து அழிக்க முடியாத பாதுகாப்பு அரணாகவும் விளங்கும் என்ற பொருளை இக்குறள் மூலம் உணர்த்துகிறார் திருவள்ளுவர்.

வள்ளலார் அறிவைப் பற்றிக் கூறும்போது உடலின் வளர்ச்சிக்கேற்ற அறிவின் பக்குவத்தை தந்தவன் இறைவன் என்றும் அறிவைத் தந்து அறிவாக விளங்குபவன் இறைவன் என்றும் வலியுறுத்துகிறார். “அச்சிறு பருவத்திலே ஜாதி, ஆசிரமம் ஆசாரம் என்னும் பொய்யுலகாசாரத்தைப் பொய்யென்றறிவித்து அவைகளைக் கடைபிடிக்காமல் தடை செய்வித்து அப்பருவம் ஏறந்தோறும் ஏறுந்தோறும் எனது அறிவை விளக்கஞ் செய்து என்னை மேல்நிலையில் ஏற்றி ஏற்றி நிலைக்கலைந்தருணீர்”. (அ. மாணிக்கம் உரை திரு அருட்பா இரண்டாம் திருமுறை – ப.418)

எனவே வள்ளலாரின் ஆன்மீகப் பயணத்தை நோக்கும்போது முருகன், சிவன், விநாயகர், தேவி, இராமன் என உருவ வழிபாட்டைத்தொடங்கி பின் அடியவர்களைப் பாடினார். இறுதியில் தத்துவார்த்தம் அமைகிறது. உரைநடைப் படைப்பில் மனுமுறை கண்ட வாசகம் என்பது மனுநீதி சோழன் கதையை மையப்படுத்தியதாகும். ஜீவகாருண்ணியத்தில் உயிர் கருணையை மையப்படுத்தியதாக அமைகிறது. உருவவழிபாட்டில் இருந்து ஜோதி வழிபாட்டையும் மனித இரக்கத்தையும் தன் வாழ்க்கையின் ஆன்மீகப் பரிணாம வளர்ச்சியாகக் கொண்டுள்ளார் என்பதை இதன்மூலம் உணர முடிகிறது.